# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1998/37 - 2016 දෙසැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2016.12.23

1998/37 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**திருத்தம்**

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : பீஎல்டீஎஸ்/காணி/04/சுவீ/71.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2003.09.09 ஆந் திகதிய 1305/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், பெல்மதுளை பிரதேச செயலாளர் பிரிவில், உடபத்துவே சன்னஸ்கம கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, இரத்தினபுரி மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபட இல. 209, பிற்சேர்க்கை இல. 12 இல் விபரிக்கப்பட்டுள்ள ஒரு (01) காணித் துண்டின் மேலதிக விபரம் பின்வருமாறு:-

1. **துண்டு இல. 445**

காணியின் பெயர்: மஹாகும்புரேகொட; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: ரத்ன மல்வத்த, லெல்லோபிட்டி, சன்னஸ்கம; விஸ்தீரணம்: 0.0051 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி மு.ப. 09.30 மணிக்கு பெல்மதுளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக தோன்றும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

உரித்து தொடர்பான ஆவணங்கள் பரிசீலணையின் போது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

சுகத் சிசிற குமார,
பிரதேச செயலாளர்,
பெல்மதுளை.

பிரதேச செயலகம்,
பெல்மதுளை,
2016, திசெம்பர் 21.

1 - 201


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*





இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.